REGD. No. M. 6311

'PHONE No. 55630

தனி இதழ் ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 187

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ 24—0—0
6 மாதம் ரூ 12—0—0
3 மாதம் ரூ 6—0—0
வெளிநாடு
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY ! THE OFFICIAL ORGAN OF THE D.P.F

சென்னை: தைமீ 6உ செவ்வாய் (19—1—54) ★ ★ ★ வெளியூர்: தைமீ 7உ புதன் (20—1—54)

கல்லக்குடி அறப்போராட்ட வழக்கு

—(:)—

வழக்கறிஞர்கள் வாதம் முடிவுற்றது

21ம் தேதி தீர்ப்பளிக்கப்படும்

திருச்சி, ஜன. 18—

கல்லக்குடி அறப்போராட்ட வழக்கு இன்று காலை 11 மணிக்கு, திருச்சி சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் கே. பி. ராதாகிருஷ்ணனின் முன்னிலையில் விசாரணை நடைபெற்றது. இரு தரப்பு வழக்கறிஞர்களும் தங்கள் கட்சியை வாதித்தார்கள்.

கழகத் தோழர்களின் வழக்கறிஞர், திரு. சந்திரசேகர உடையார், தனது வாதத்தில் கூறியதன் சாரம்:—

"டால்மியாபுரத்தில் ஜூலை 15ந் தேதியன்று என்ன நடந்தது என்பதை ஒருபுறம்விட்டு, இந்த வழக்கில் நாம் கவனிக்கவேண்டியதெல்லாம், இந்த 24 எதிரிகளுக்கும், அதிலே என்ன சம்பந்தம் என்பதுதான். இவர்கள் சார்ந்திருக்கிற தி.மு.கழகத்தின் லட்சியமே அஹிம்சா ரீதியானதுதான். இவர்களில் பலரை அடையாளங் காட்டிய சர்க்கார் தரப்பு சாட்சிகள், முதல் விசாரணையில் சில பேரை காட்டியும், மறு விசாரணையில் வேறு பலரைக் காட்டியும் குழப்பியிருக்கிறார்கள். இதிலிருந்தே அடையாளம் காட்டுவது, ஒரு 'குட்டி நாடக'மாக நடைபெற்றிருக்கிறது என்பது தெளிவாகும். ஒத்திகை மூலம் அடையாளங் காட்டியிருக்கிறார்கள் என்பது வெள்ளிடைமலை. இந்த வழக்கிலே கைது செய்யப்பட்டு, இப்போது குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கும் சிலர், ஒரு பாவமும் அறியாதவர்கள். மாடு வாங்கப் போனவர்கள், பால் விற்கப் போனவர்கள், ரயிலிலே பிரயாணம் செய்த 'பாவ'த்தைச் செய்தவர்கள்—இப்படி சிலர்; முதல் எதிரி கண்ணதாசனும், சிலரும் தாங்கள் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், அஹிம்சா பூர்வமான மறியலுக்குச் சென்றதாகவும், ஆனால், அதற்கு முன்னதாகவே போலீசார், அவர்களை அடித்துத் தூக்கி, உருட்டிப் போட்டதாகவும் கூறியிருக்கிறார்கள்.

இன்னும் சிலர், கைது செய்யப்பட்ட முறையே வேடிக்கையாக இருக்கிறது. நண்பர்களைத் தேடிச் சென்ற 'பாவ'த்திற்காக ஜங்ஷனிலே சிலர் கைது செய்யப்பட்டு, தப்பான முறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். யாருடைய உத்தரவின் பேரில் தகவலின் பேரில் போலீசார் இவர்களைக் கைது செய்தார்கள் என்பது ருசுப்பிக்கப்படவே இல்லை.

சப்-இன்ஸ்பெக்டர் குப்புசாமி நாயுடுவும் இதேமாதிரி சிலரை கைது செய்திருக்கிறார்; (இன்னும் சில சட்டப் பிரச்சினைகளை விளக்கிவிட்டு) ஆகவே, 24 பேர் இந்தக் கோர்ட்டிலே நீதிக்காகக் காத்திருக்கிறார்கள்; அவர்களுக்கு நீதி வழங்கக் கோருகிறேன்," என்று முடித்தார்.

பிறகு, சர்க்கார் தரப்பு வக்கீல் பப்ளிக் பிராசிக்யூட்டர் மகாதேவ சாஸ்திரி, தனது வாதத்தில் கூறியதாவது:—

"எல்லா எதிரிகளும், 147 இ. பி. கோ. பிரிவின்படி குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்கள். சில எதிரிகள் 332 இ. பி. கோ. படியும், கண்ணதாசன் உட்பட சில எதிரிகள் 332—149 இ. பி. கோ. பிரிவின்படியும் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்கள். சில எதிரிகள் 128-வது ரயில்வே சட்டப்பிரிவின்படி குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்கள். எதிரிகள் தாங்கள் பேரணியாக ஓடப் போனதாகக் கூறுகிறார்கள். முதல் நாள் குழுவினர் இரண்டு பேர்களிலும் ஓட்டிவிட்ட பிறகு, இவர்களுக்கு அங்கே என்ன வேலை? 'ரயிலை நிறுத்த வேண்டும், நடத்தால் மீளவேண்டும், ஒன்றாக்குப் பின் ஒன்று செய்யவேண்டும்' என்ற பொது நோக்கத்தோடுதான் போயிருக்கிறார்கள். அதிகாரிகள் பலர் கல்லெறியால் காயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அந்த நேரத்தில் எதிரிகளில் யாருக்கும் அங்கிருக்க நியாயமான காரணம் இல்லை. இதை கவனிக்க வேண்டும்."

மேலும், அவர், சட்ட நுணுக்கங்களை யெல்லாம் கூறி, 1-15 மணி நேரம் வாதித்தார். கடைசியில் கழக வக்கீல் திரு சந்திரசேகர உடையார் தனது இறுதிப் பதிலை 5 நிமிடம் கூறினார்.

வழக்கு தீர்ப்புக்காக 21-1-54 வியாழனுக்கு ஒத்திவைக்கப்பட்டது. அன்று காலை 11 மணிக்கு தீர்ப்புக் கூறப்படும். (ந. நி.)

கல்லக்குடி வழக்கு

சம்பந்தப்பட்ட தோழர்களுக்கு

21—1—54 வியாழன் காலை 10 மணிக்கு, கோர்ட்டில் எல்லோரும் இருக்க வேண்டும். யாது காரணம் பற்றியும் தாமதமோ, வராமலிருப்பதோ கூடாது. தீர்ப்பு அன்று தாமதம் கூடாது. தோழர்கள் கண்டிப்பாக வந்து சேரக் கோருகிறேன்."

கண்ணதாசன்.

பொதுச் செயலாளர் அண்ணாதுரை மாயவரம் வருகை

★

தி. மு. கழகப் பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்களும், தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல் ஏ. அவர்களும், 31—1—54-ல், மாயவரம் தி. மு. கழகச் சார்பில், தூத்துக்குடி வழக்கு நிதி அளிப்புப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்வார்கள்.

கொடியை ....

(5-ம் கலத் தொடர்ச்சி)

னர்.

செயலாளர் நன்றி கூற கூட்டம் இரவு 10 மணிக்கு முடிவுற்றது. தோழர்கள் காதர்கனி, சேக்தாவூது, பூவை ராமசாமி, சக்திவேல், சுவாமிநாதன் ஆகியோர் அமைதி காக்க அரும்பாடு பட்டனர்.

அன்றிரவே, ஏற்றப்பட்ட கொடி, காங்கிரஸ் நண்பர்களால் அறுக்கப்பட்டு விட்டதாகத் தெரிகிறது.

கொடியை அவிழ்க்கும் காங்கிரஸ் தூர்ச்சாதனர்கள்!

—(:)—

கக்கன், எம். பி. கலகபதியாகிறார்!

மேலூரில் காங்கிரஸ் தோழர்களின் 'திருப்பணி!'

மேலூர், ஜன. 19—

16—1—54ல், தி. மு. கழகச் சார்பில் கொடியேற்று விழாவும், பொதுக்கூட்டமும் நடைபெற்றது. கொடியேற்றக் கூடாதென எதிர்ப்புக் கிளர்ச்சி செய்த காங்கிரசாரின் ஆர்ப்பாட்டம் தோல்வியுற்றது. போலீசார் கடுமையான அமைதியை நிலைநாட்டினர்.

பிற்பகல் 5 மணிக்கு கழகப் பணிமனையிலிருந்து ஊர்வலம் புறப்பட்டது. சாலக்கரையான் தெருவில் காங்கிரஸ் தோழர் உபில்லப்பன் (காங்கிரஸ் எம். எல். ஏ. உடையப்பரின் புதல்வர்) தி. மு. கழகக் கொடியை ஏற்றி வைத்தார்.

அதன் பின்பு ஊர்வலம் கோரப்பன் நிலையம் பக்கமாகச் சென்று இளைஞர் மன்றத்தின் சார்பில் கொடியேற்ற இருந்த மைதானத்தை அடைந்தது. கொடியேற்ற வொட்டாமல் தடுப்பதற்காக, காங்கிரஸ் களபதிகள், அங்கு ஏற்கனவே ஆயத்தம் செய்துகொண்டிருந்தமையால், அந்த இடத்தில், பலத்த போலீஸ் பந்தோபஸ்து வைக்கப்பட்டிருந்தது.

தோழர் என். என் தென்னரசு தி. மு. கழக கொடியை ஏற்றுவதற்காக கம்பத்தின் அருகே போனபோது, காங்கிரஸ் களபதிகள், கொடிக் கம்பத்தையும், கொடியையும் சேர்த்துக் கூடிப் பிடித்துக் கொண்டார்கள்.

உடனே போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் வி. பாலகிருஷ்ணன் நாயுடு அவர்கள் குறுக்கிட்டு, இருசாரரையும் அமைதியாக இருக்கும்படி கேட்டுக் கொண்டார். தி. மு. கழகத் தோழர்கள் அமைதியாகவும், கட்டுப்பாடாகவும் கைகோர்த்தவண்ணம் அணிவகுத்து நின்றனர். தேசியத் தோழர்கள் ஒழிந்தபாடில்லை—'செத்தாலும் கொடியேற்ற விடோம்' என்று கூவினர். செய்தியறிந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர், மற்றும் சில போலீஸ்காரர்களோடு மைதானத்திற்கு வந்து, காங்கிரஸ் இளைஞர்களை ஒதுங்கியிருக்கும்படியும், பொது இடத்தில் எவரும் கொடியேற்றலாமென்றும் சொன்னார். அப்போதும் தேசியத் தோழர்கள் கேட்கவில்லை.

சர்க்கிள் இன்ஸ்பெக்டர், காங்கிரஸ்காரர்களை 'இன்னின்ன காரணத்திற்காக நாங்கள் கொடியேற்றவிட மறுக்கிறோம்,' என்று எழுதிக் கொடுத்துவிட்டு, நீதிமன்றத்தின் மூலமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளுங்கள் என்றார். அதன்படி காங்கிரஸ் களபதிகள் எழுதிக்கொடுத்துக் கையொப்பமிட்டார்கள். பதினெட்டான்குடியைச் சேர்ந்த காங்கிரஸ் தோழர் பழனிச்சாமியின் பிடியில், கத்தி வைத்திருந்தார். அதுவும் போலீஸ் அதிகாரிகளால் குறித்துக் கொள்ளப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் தோழர் கக்கன் (காங்கிரஸ்) காங்கிரஸ் பிரமுகர்கள் பலருடன் மைதானத்திற்கு வந்தார். போலீஸ் அதிகாரிகள், நிலைமையை அவரிடம் விளக்கிச் சொன்னார்கள். அதற்கு தோழர் கக்கன், 'கொடி ஏற்றிக்கொள்ள முடிந்தால் ஏற்றிக் கொள்ளட்டும்,' என்றார். உடனே தேசியத் தோழர்கள் "கொடியேற்றுவோம்! கைகளை வெட்டுவோம்!" என்று கூவினர். போலீசார், அவர்களை அப்புறப்படுத்த வேண்டியதில்லை ஏற்படவே அவர்களை ஒதுக்கிக்கொண்டு போய்விட்டார்கள். வழிநெடுக தேசியத் தோழர்கள் ஆபாச வார்த்தைகளைக் கூவிக்கொண்டே சென்றனர்.

அதன் பிறகு பலத்த வாழ்த்தொலிகளுக்கிடையே தி. மு. கழக கொடி ஏற்றப்பட்டது. மற்றும் இரு இடங்களில், கிழப்பூங்குடி, செங்குட்டுவன் கொடியேற்றினர்.

இரவு 7-45 மணிக்கு, பொதுக்கூட்டம் ஆரம்பமானது. கூட்டத்திற்கு மு. ராமு தலைமை வகித்தார். தோழர்கள் தென்னரசு, பில்லப்பன், திருஞானம், சந்தானம், செங்குட்டுவன், மலைச்சாமி (மாணவர்), காதர்மொய்தீன் ஆகியோர் தேசியத் திராவிடர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென வலியுறுத்திப் பேசினர்.

(தொடர்ச்சி 3-ம் கலம் பார்க்க)

இந்தியா—இலங்கை ஒப்பந்தம்

வயது வந்தோரை வாக்காளர் பட்டியலில் சேர்க்க இலங்கை அரசு இணக்கம்

புதுடெல்லி, ஜன. 19—

இந்தியப் பிரதம மந்திரி நேருவும், இலங்கைப் பிரதமர் கொத்தலாவலையும் மூன்று தினங்கள் பேச்சு வார்த்தை நடத்தியபின் ஏற்பட்ட ஒரு ஒப்பந்தத்தில், நேற்று பிற்பகல் 2-45 மணிக்கு கையெழுத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் வாக்காளர் பட்டியலில் இல்லாத வயது வந்த இலங்கை இந்தியர் பற்றி ஒரு பட்டியலைத் தயாரிக்கவும், அதை அவ்வப்போது திருத்தம் செய்து பூர்த்தி செய்யவும் இலங்கை சர்க்கார் ஒப்புதல் தந்துள்ளனர்.

கள்ளக் குடியேற்றத்தைத் தடுக்க போலீஸ் அதிகாரிகள் அடிபோடைக்கப்போது மாகாணங்கள் கூட்டி விரோதித்த தகவல்களைப் பரிமாறிக்கொள்வார்கள்.

வாக்காளர் பட்டியலில் இடம் பெறாத வயது வந்தோர் இனி இடம் பெறுவர்.

பதிவுசெய்யப்படாதவர் போர்களின் தாய்மொழி இந்தியமொழியாக இருந்தால், சட்ட விரோதமாகக் குடியேறியவர்களாகக் கருதப்படுவோர். அவர்களை திரும்ப அனுப்ப அவர் உதவியளிப்பார்

ஒருவரை சட்ட விரோதமாகக் குடியேறியவர் என்று கூறி, அவர் மீது நடவடிக்கை எடுப்பதற்குப் போதிய காரணமுள்ளதா என்பதை ஆலோசிக்க இந்தியத் தூதருக்கு சந்தர்ப்பமளிக்கவேண்டும்.

இந்தியா, பாகிஸ்தான் பிரஜா உரிமைச் சட்டத்தின்கீழ் பிரஜைகளைப் பதிவு செய்யும் விஷயம் துரிதப்படுத்தப்படும்.

தனி வாக்காளர் பட்டியலிலுள்ள பிரஜைகளுக்கு, ஜனப்பிரதிநிதி சபைக்கு ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள மெம்பர்களைத் தேர்ந்தெடுக்க உரிமை உண்டு. இந்த எண்ணிக்கை இந்தியப் பிரதமரைக் கலந்தாலோசித்தே நிர்ணயிக்கப்படும்

பிரஜைகளாகப் பதிவு செய்யப்படாதவர்கள் இந்தியப் பிரஜையாகப் பதிவு செய்துகொள்ள வசதியளிக்கப்படும்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 19—1—1954 செவ்வாய்

ஒரு சோறு பதம்!

பானை சோறும் வெந்துவிட்டதா, இல்லையா, என்று பதம் பார்க்க, ஒரு சோறு போதுமானது. ஒவ்வொரு சோற்றையும் பதம் பார்த்து, பானை சோறும் வெந்து விட்டது என்று, முடிவு கட்ட முனைவது, வெறும் பைத்தியக்காரத்தனம். எனவே, ஒரு சோற்றை எடுத்து நசுக்கிப் பார்த்தாலே, பானை சோற்றின் உண்மையும் விளங்கிவிடும் என்பது பெறப்படுகிறது.

மத்திய கிழக்குப் பகுதியில் உள்ள பல சிறு நாடுகளும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிடியில் சிக்கி, சீரழிந்து கிடந்தன, என்பது, வரலாறு. அந்தச் சிறு நாடுகளின் அரசியல் அதிகாரம் நேரடியாகப் பிரிட்டிஷ் பிடியில் சிக்கிக் கிடக்கவில்லையானாலும், அவைகளினுடைய பொருளாதாரம், ஏகாதிபத்திய சுரண்டல் இயந்திரத்துடன் இணைக்கப்பட்ட ஒரு உறுப்பாகவே இருந்து வந்திருக்கிறது, என்பது உண்மையாகும். ஒரு நாட்டின் பொருளாதாரம், பிற நாட்டின் பிடிப்பில் உள்ளவரை, அந்த நாட்டின் அரசியலும், தன்னிச்சையாக இயங்காமல், பிறநாட்டின் ஏவல்படிதான் ஆடிக் கிடக்கும் என்பதும் நாம் அறிந்ததே.

எனவே, பல நாளாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடம் சிக்கி, அவதிப்பட்டுக் கொண்டிருந்த மத்திய கிழக்குப் பகுதி நாடுகள் அனைத்திலும், ஒரு புதிய விடுதலை வேட்கை உருப்பெற்றிருப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை. அது இயற்கையில் நிகழக்கூடிய ஒன்றேயாகும்.

எழுந்துள்ள உரிமை உணர்வின் காரணமாகவும், முன்னுள் அனுபவித்த இன்னல்கள் பலவற்றின் காரணமாகவும், பொதுவாகப் பிற வல்லரசுகளிடமும், குறிப்பாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடமும் அருவெறுப்பும், அச்சமும், ஆத்திரமும் அந்தச் சிறு நாடுகளுக்கு இருந்துவருவதும் எதிர்பார்க்கக் கூடியதேயாகும். அதன் விளைவாக, ஏகாதிபத்தியம் மேற்கொள்ளும் எந்த நடவடிக்கைகளிலும், அச்சிறு நாடுகளுக்கும் பெரிய அளவில் அசைக்க முடியாத ஐயப்பாடு கிளம்புவதும் முறையேயாகும்.

'உலகைச் செம்மையாக்கும் முழுப் பளுவும், வெள்ளை நிறத்தவர்மீது சுமந்து கிடக்கிறது' என்ற தொன்மையான சொல், சென்ற பெரும் போருக்குப் பிறகு, நகைப்புக்குரிய கேலிச் சொல்லாகப் போய்விட்டது என்பதை, உலக நடப்பு மெய்ப்பித்துக் காட்டி விட்டது; காட்டிக்கொண்டும் வருகிறது.

பாரசீகத்தில் எழுந்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கிளர்ச்சி, இந்தப் புதிய உரிமை வேட்கை இனத்தைச் சேர்ந்ததுதான். ஆங்கில ஏகாதிபத்தியம், பன்னெடுங்காலமாக அங்கிருந்த எண்ணெய்க் கிணற்றில் கொள்ளையடித்து வந்ததைத் தடுத்து நிறுத்த, முதியவர் முசாதீக் எடுத்துக்கொண்ட முயற்சி பாராட்டத்தக்கதாகும். ஏகாதிபத்தியத்தின் ஏகபோக உரிமையாக இருந்த எண்ணெய்க் கிணற்றைப் பாரசீக மக்களின் பொதுச் சொத்தாக்க எடுத்துக்கொண்ட முயற்சியில் முழு வெற்றி பெறுவதற்குப் பதிலாக, முதியவரால், ஓரளவுதான் வெற்றி பெற முடிந்தது.

அதாவது, எண்ணெய்க் கிணற்றில் ஆங்கிலேயர் பாராட்டிய அக்கிரம உரிமையைத்தான், அவரால் பறித்துக் கொள்ள முடிந்தது. ஆனால், எண்ணெய்க் கிணற்றிலிருந்து, மேற்கொண்டு எண்ணெய் எடுக்கவும், எடுத்த எண்ணெயை தூய்மையாக்கவும், தூய்மையாக்கியதை வெளிநாடுகளில் விற்க வழி வகைக் காணவும், முதியவரால் முடியவில்லை. இந்தக் காரியங்கள், அவருடைய நாட்டின் சக்தி நிலைக்கு மீறியவையாக இருந்து விட்டன.

இந்த வகையில், ஏகாதிபத்தியம் ஏற்படுத்திய தடைகளும் அதிகம். இவ்வளவையும் மீற, முதியவருக்குப் பிறர் உதவியும் இல்லை—சொந்தத்தில், தேவையான வசதியும் இல்லை. எனவே, வெறுங் கையை முழம்போட்டு, மக்களுக்குள்ள ஏகாதிபத்திய எதிர்ப்புணர்ச்சியைத் தொடர்ந்து, கட்டிக் காக்கலாம் என்ற முடிவை, முசாதீக் மேற்கொள்ளலானார். அதற்காக, அரசியல் அதிகாரம் அனைத்தும், தம் கைக்குள் அடங்கிக் கிடக்கும்படியான முயற்சியில், மேலும் மேலும் தீவிரம் காட்டலானார். முதியவரின் லட்சிய நோக்கு, இறுதியில், அதிகார அரசியல் கூத்தாக முடிவுற்றது. நிற்க,

பாரசீக உரிமைக் கிளர்ச்சியைப் போன்றதுதான், அடிப்படையில், எகிப்து எழுச்சியும். ஏகாதிபத்தியத்திடம், எகிப்து மக்களுக்கு இருந்த ஆத்திரத்தைப் பயன்படுத்திக்கொண்டு, நகிப் என்ற இராணுவத் தலைவர் அதிகாரபீடமேறினார்.

அங்கு ஆட்சிப் பொறுப்பில் இருந்த ஆளவந்தாரும், அரசரும் கடைந்தெடுத்த அக்கிரமச் சுயநலமிகளாக இருக்கவே, அவர்களை விரட்டிவிட்டு, ஆட்சியைக் கைப்பற்றிய நகிபுக்கு மக்களின் ஆதரவு தாராளமாகக் கிடைத்தது.

நகிபின் இராணுவ ஆட்சியில், முன் ஆட்சிகளில் கிடைக்கப்பெறாத நலன்களை எல்லாம், தாங்கள் பெறப்போகிறோம் என்ற நல்ல நம்பிக்கையும் எகிப்து மக்களுக்கு ஏற்பட்டது. சூயஸ் பகுதியில் உள்ள பிரிட்டிஷ் ஏகாதிபத்தியப் பாதுகாப்புப் படையும் வெளியேற்றப்பட்டு, எகிப்து நாட்டின் தன்மானமும் நகிபால் காப்பாற்றப்படும் என்ற உறுதியை அம் மக்கள் கொண்டுள்ளனர்.

சூயஸ் பாதுகாப்புத் தளப் பிரச்னையில், இந்த முடிவு இன்னும் ஏற்படவில்லை என்பது அனைவருக்கும் தெரியும். இதில், நகிப், எகிப்துக்குப் பெற்றுத் தரப்போவது என்ன என்பது சுரொட்டாகத்தான் இப்பொழுதும் இருந்து வருகிறது.

நகிப் ஆட்சி பீடத்தைக் கைப்பற்றியவுடனே, நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளை சட்ட விரோதமாக்கினார். மக்கள் நலனைப் பேணி வளர்க்காத கட்சிகள், மெள்ள மெள்ளச் சாவதுதான் இயற்கை. அதை, ஒருவராலும் தடுத்துவிடவும் முடியாது. இராணுவத் தலைவரின் கட்டளை, அந்தச் சாவைத் துரிதமாக்கின.

நகிப் ஆட்சிக்கு வந்து பதினெட்டுத் திங்களுக்கு மேலாகி விட்டது. இந்தப் பதினெட்டு மாதங்களாக எகிப்து மக்களுக்கு அவர் உருப்படியாகச் செய்துள்ள காரியம் இதுதான், என, வரையறுத்துக் கூறுவதற்கில்லை. ஆனால், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின்மீது மக்களுக்குள்ள சீற்றத்தைத் தணிந்துபோக விடாமல் பார்த்துக் கொள்வதில் மட்டும், நகிப் தீவிரமாக இருந்து வருகிறார். இந்தத் துறையில், ஒவ்வொரு வினாடியையும் தவற விடாமல் அவர் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்.

ஆவேசப் பேச்சு, பசித்த வயிறுக்கு ஒரு கவளம் உணவு கொடுக்கவும் உதவாது என்பதை, நகிப் உணர்ந்திருப்பதாக, அவர் நடைமுறை எடுத்துக் காட்டவில்லை. வாய்வீச்சிலேயே வளமனைத்தையும் எகிப்து மக்களுக்குக் கொண்டுவந்து குவித்து விடலாம் என்றே, நகிப், நம்பிக் கொண்டிருக்கிறாரோ என்று நினைக்க வேண்டியதாக இருக்கிறது.

இருந்தாற்போல் இருந்து, பொது மக்கள் அன்புக்குப் பாத்திரமான முஸ்லீம் சகோதர சங்கத்தைச் சட்டவிரோத நிறுவனம் என, நகிப் அறிவித்திருக்கிறார். அந்தச் சங்கத்தின் முக்கியத் தலைவர்களை எல்லாம்—ஏறத்தாழ நானூறுக்கு மேற்பட்டவர்களை—கைது செய்து காவலில் வைத்திருக்கிறார்.

சட்ட விரோதமான நிறுவனம் என, முஸ்லிம் சகோதர சங்கத்தை நகிப் அறிவித்த உடனே, தனது வெளிப்படையான நடைமுறையை அந்தச் சங்கம் நிறுத்திக் கொண்டது. இனி, திரைமறைவில் அந்தச் சங்கத்தின் நடவடிக்கை இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அது, பயங்கரமான உருவமெடுக்கும் என்பதும் எதிர்பார்க்கக்கூடியதே.

பிரிட்டிஷ் அதிகாரிகளோடு கூடிக்கொண்டு, முஸ்லிம் சகோதர சங்கத்தினர், சர்க்காரைக் கவிழ்க்கச் சதி செய்தனர் என்ற காரணத்துக்காகத்தான், அந்தச் சங்கத்தை சட்ட விரோத ஸ்தாபனமாக்கினதாக நகிப் இராணுவ சர்க்கார் கூறுகிறது.

இந்தக் குற்றச்சாட்டில் உண்மை இருந்தாலும் இருக்கலாம் அல்லது இல்லாமற்போனாலும் போகலாம். எல்லா சர்க்காரும் கூறுவது போன்றே இந்தக் கூற்றும் இருந்தாலும் இருக்கலாம்.

ஆங்கில அதிகாரிகளோடு கூடிக்கொண்டு, சர்க்காரைக் கவிழ்க்க, முஸ்லீம் சகோதர சங்கத்தினர் சதி செய்தனர் என்பதை மெய்ப்பிக்கப் போதிய சாட்சியங்கள் இருக்குமானால், குறிப்பிட்ட சதியில் சம்பந்தப்பட்டவர்கள்மீது வழக்குத் தொடுத்து, வெளிப்படையாக, முறையான விசாரணை செய்து தண்டிப்பதுதான் நாகரீகமாகும்.

இதை மேற்கொள்வதை விட்டுவிட்டு, சிலர் சதியிலீடுபட்டார்கள் அல்லது ஈடுபட இருந்தார்கள் என்பதற்காக, அவர்கள் இணைந்துள்ள ஒரு பெரிய நிறுவனத்தையே சட்ட விரோதமாக்குவது என்பது விரும்பக் கூடாததாகும்.

செல்வாக்குள்ள ஸ்தாபனத்தையே, நகிப், சட்ட விரோதமாக ஆக்கி இருப்பதால், அவர் சுமத்தும் சதி குற்றம் உண்மையானதுதானா என்ற சிந்தனையைக் கிளறியே தீரும். நகத்தால் கிள்ளி எறிய வேண்டியதற்குக் கோடாலியைக் கையாள மாட்டார்கள். ஆனால், நகிப், சதி செய்த சிலரை மட்டுமே தண்டிப்பதற்குப் பதில், ஒரு பலம் பொருந்திய அரசியல் மத ஸ்தாபனத்தையே சட்ட விரோதமாக்கிவிட்டு இருக்கிறார்.

எனவே, முஸ்லீம் சகோதர சங்கம் இயங்கி வருவதில் இராணுவத் தலைவர் நகிப், ஏதோ ஒரு பேராபத்தை எதிர்பார்த்து நடுங்கக் கொண்டிருக்கிறார் என்ற உண்மையைத்தான் விளக்கமாகக் காட்டுகிறது, நகிபின், அளவு கடந்த!

இது ஒரு பக்கம் இருக்க, முஸ்லீம் சகோதர சங்கத்தின் தலைமைதான் தமது ஆட்சிக்கு எதிராக இருப்பதாகவும் நாட்டுப்புறங்களில் உள்ள சங்கச் சார்புடையவர்கள் அனைவரும் சாதகமாக இருப்பதாகவும், நகிப் சார்பு செய்தி கூறுகிறது.

தமது ஆட்சிக்குத் தலைமையினரிடமிருந்துதான் எதிர்ப்புக் கிளம்புகிறது என்றால், தலைமையினர்தான் தமது ஆட்சியைக் கவிழ்க்கச் சதி செய்தார்கள் என்றால், அவர்கள்மீது மட்டும் சதி வழக்குத் தொடுப்பதுதான் நியாயமாகும். இந்த நியாயமான செயலை மேற்கொள்ளுவதற்குப் பதிலாக, தமக்குச் சாதகமாக இருப்பதாகச் சொல்லப்படும் உறுப்பினர்களையும் கூட சட்ட எதிரிகள் என்று அறிவிக்க, நகிப் முனைந்ததின் இரகசியம் என்ன என்பது சிந்திக்கத்தக்கது. நிற்க,

இராணுவத் தலைவர் நகிபின் ஆட்சி, மக்களாட்சி முறையை அறவே விரும்பவில்லை; எதிர்க் கட்சி உருவாவதையும் அவர் வெறுக்கிறார் என்ற உண்மை, அவர் போக்கில் இருந்து உறுதியாகிறது.

மேலும், அவருடைய ஆட்சி பீடமும் ஆட்டங் கொடுக்கத் தொடங்கி இருக்கிறது என்ற மறுக்க முடியாத உண்மையையும், ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற அனுபவத்திற்கு ஒப்ப, அவருடைய அடக்குமுறை எடுத்துக் காட்டிவிட்டது.

ஒரிசா கவர்னர்

பி. எஸ். குமாரசாமி ராஜா நியமனம்

புதுடில்லி, ஜன. 16—

சென்னை முன்னாள் முதலமைச்சர் தோழர் பி. எஸ். குமாரசாமி ராஜா ஒரிசா கவர்னராக நியமிக்கப்படுவார் என்று நம்பகமாகத் தெரிய வருகிறது. தற்போது ஒரிசா கவர்னராக இருக்கும் பசல் அலி, எல்லை நிர்ணயக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கடந்த சென்னைத் தேர்தலுக்கு முன், குமாரசாமி ராஜா சென்னை முதலமைச்சராக இருந்தார்.

இரண்டாவது நிக்கல் நாணயங்கள்

வதந்திகளுக்கு மறுப்பு

புதுடில்லி, ஜன. 19—

நிக்கல்-பித்தளை கலவையால் தயாரிக்கப்பட்ட இரண்டு அணா நாணயங்கள் செலாவணியிலிருந்து எடுபட்டுவிட்டன என்ற வதந்தி நாட்டின் பல பாகங்களில் பெருவாரியாகப் பரவியிருக்கிறது; அவன்றினால், பொது மக்கள் தங்களுடைய சாதாரண கொடுக்கல்—வாங்கல்களில், இந்த நாணயங்களை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். இந்த வதந்தி முற்றிலும் ஆதாரமற்றது என்று பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

தெரிந்து கொள்ளுங்கள்!

★

1. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில், தற்போது 3,000 கோசாலைகளும், 'பிஞ்சராபோல்'களும் இருக்கின்றன. இந்த நிலையங்களில் சுமார் 6,00,000 கால்நடைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அதற்காக, ஆண்டுதோறும் சுமார் 7 கோடி ரூபாய் செலவாகிறது.
2. ஐந்து ஆண்டுத் திட்டப்படிக் கால்நடை கேந்திர கிராமத் திட்டத்தின்கீழ், 600 கேந்திர கிராமங்களையும், செயற்கை முறையில் சினைப்படுத்தும் 150 நிலையங்களையும் ஏற்படுத்துவதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு, மத்திய சர்க்கார் மானியமாக 3 கோடி ரூபாயும், மாநில சர்க்கார்கள் பங்காக அதே போன்ற தொகையும் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.
3. ஐந்து ஆண்டுத் திட்ட காலத்திற்குள், கறவையில்லாத கால்நடைகளைப் பராமரித்து வருவதற்காக 160 கோ சாதன நிலையங்களை நிறுவ உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மத்திய சர்க்கார் பங்காக 97.15 லட்சம் ரூபாயும், மாநில சர்க்கார்கள் பங்காக கிட்டத்தட்ட அதற்குச் சமமான தொகையும் செலவிடப்படும்.
4. இந்திய சர்க்கார், இன விருத்திக்கும் இதர காரியங்களுக்கும் தேவையான உயர்ந்த ஜாதி பொலி காளைகளைப் பராமரித்து வருவதற்காக, கர்னால் கால்நடை பால் பண்ணை, இஸத்நகர் இந்திய மிருக வைத்திய ஆராய்ச்சி நிலையம், பங்களூர் இந்திய பால் பண்ணை ஆராய்ச்சி ஸ்தாபனம் ஆகிய மூன்று மத்திய ஸ்தாபனங்களை நடத்தி வருகின்றனர்.
5. உழைப்பிற்கும், பால் கறவைக்கும் லாயக்கான கால்நடை இனங்களை அபிவிருத்தி செய்வதற்காக, கால்நடை வளர்ப்புப் பண்ணைகளில் உற்பத்தியாகும் உயர்ந்த இனக் காளைகளில் சுமார் 750 காளைகளை இந்திய சர்க்கார் பல்வேறு மாநிலங்களுக்கும் ஆண்டுதோறும் விநியோகித்து வருகின்றனர்.

தன்மானத் திருமணத்தைச் செல்லுபடியாக்கச் சட்டம்

உட்பிரிவுகள் - பற்றி விளக்கம்

சென்னை, ஜன 18—

சுயமரியாதைத் திருமணங்களை செல்லுபடியாக்க சர்க்கார் ஒரு மசோதா கொண்டுவந்துள்ளனர். அதன் நோக்கங்கள் பற்றி பின்வருமாறு அறிவிக்கப்படுகிறது:—

"சுயமரியாதை முறைப்படி நடத்தப்பட்ட திருமணங்கள் இந்து மதப்படியோ, சட்டப்படியோ, அல்லது, பழைய பழக்க வழக்கங்கள் படியோ நடைபெறவில்லையாதலால், அவை செல்லாது," என்று, சமீபத்தில் ஒரு வழக்கின் ஐகோர்ட் தீர்ப்பளித்திருப்பதிலிருந்து ஏற்படுகிறது. ஆகவே, இந்தத் திருமணங்கள் மூலம் பிறக்கும் குழந்தைகள் சட்டபூர்வமாய்ப் பிறக்காத குழந்தைகளாகிவிடுகின்றன. இந்தத் திருமணங்களுக்கு உட்பட்ட தம்பதிகள் 'திருமணங்கள் செல்லக் கூடியவை,' என்றே நம்பினர். இந்தத் திருமணங்களைச் செல்லுபடியாக்கவே இம்மசோதா கொண்டுவரப்படுகிறது.

மசோதாவின் அம்சங்கள் கூறுவதாவது:—

"இச்சட்டத்திற்கு, 'வழக்கம் அல்லது சட்டப்படி அல்லாத இந்து திருமண (பதிவு) சட்டம் (1954)' எனப் பெயர். இது சென்னை மாகிலம் முழுவதிலும் உடனே அமுலுக்கு வரும். இச்சட்டம் ஆரம்பமாகுமுன், ஒரு இந்து ஆடவரும், ஒரு இந்து பெண்ணும் சட்டரீதியாக மணக்கும் நோக்கத்துடன், ஏதோ ஒரு முறையில் விவாகம் செய்து கொண்டிருந்து, அந்த முறை, இந்து மதக் கோட்பாடுகள் படியோ, சட்டம் அல்லது பழக்க வழக்கங்கள் படியோ இல்லாமல் இருந்தால், அந்த முறைக்கு; "வழக்கம் அல்லது சட்டப்படி அல்லாத திருமணம்" என்று பெயர்.

"இம்முறையில் மணம்செய்து கொண்ட தம்பதிகள் (ஒருவர் இறந்துவிட்டால் கணவனோ அல்லது மனைவியோ) சம்பந்தப்பட்ட தாலூகா தாசில்தாருக்கு (சென்னை நகரில் சம்பந்தப்பட்ட ரிஜிஸ்டிரார் தாசில்தாருக்கு) தங்கள் திருமணத்தைப் பதிவு செய்யக் கோரி மனுச் செய்து கொள்ளலாம். புருஷனும், மனைவியும் இறந்து, குழந்தைகள் மட்டும் பிழைத்திருந்தால், அக்குழந்தை வயது (மெஜாரிடி) அடைந்தால் மனுச் செய்து கொள்ளலாம்.

"இச்சட்டம் ஆரம்பமான தினத்திலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் மனுச் செய்துகொள்ள வேண்டும். குழந்தைகள் செய்து கொள்வதானால், மெஜர் ஆகி இரண்டு ஆண்டுகளுக்குள் மனுச் செய்து கொள்ளவேண்டும்.

"மனுக்களைப் பெற்றுக்கொண்டதும் தாசில்தார், ஒரு குறிப்பிட்ட தேதியில், இரு கண்ணியமான சாட்சிகளுடன், தாலூகா ஆபீசில் ஆஜராகும்படி கேட்டுக் கொள்வார். சாட்சிகள், திருமண சமயத்தில் பிரசன்னமாயிருந்தவர்களாக இருக்கலாம்; அல்லது, மணம் செய்துகொண்டவர்கள் கணவன், மனைவிகளாக வாழ்ந்து வந்ததாக, குறைந்தது, 10 ஆண்டுகளாகத் தெரியும் என்று சொல்லக்கூடியவர்களாக இருக்கலாம். மனுதாரர், சாட்சிகள் முன்னிலையில் தாசில்தார் தான் வைத்திருக்கும் ரிஜிஸ்டரில் திருமணம் பற்றிய விவரங்களைப் பதிவு செய்வார். பதிவில் மனுதாரர்களும், சாட்சிகளும் கையெழுத்துச் செய்ய வேண்டும். வேண்டுமென்றே பொய்யான தகவல் கொடுப்பவர்களுக்கு உயர்ந்த பட்சமாக ஒரு ஆண்டு சிறைத் தண்டனை (வெறுங்காவல் அல்லது சாதாரண காவல்) அபராதம் அல்லது இரண்டும்) அளிக்கப்படும்.

"இதன்படி ஏற்படும் குற்றங்கள், தாசில்தார் அல்லது எவர் முன் விவரங்கள் அறிவிக்கப்பட்டதோ அந்த அதிகாரி எழுதியிருந்தாலொழிய, மேஜிஸ்ட்ரேட் அல்லது ஒரு போலீஸ் அதிகாரி எழுதியிருந்தாலொழிய கோர்ட் நடவடிக்கை எடுக்காது. மாகில சர்க்கார் அல்லது அதற்கென நியமிக்கப்படும் ரெவின்யூ அதிகாரி, இந்தச் சட்டப்படி எடுக்கப்படும் எந்த நடவடிக்கை பற்றியும் தஸ்தாவேஜியை வரவழைத்து, அவை சரியானவை தானா? திருத்தமானவையா? எனப் பரிசீலிக்கலாம்; அதன் பேரில் தக்க உத்திரவும் பிறப்பிக்கலாம்.

"இச்சட்ட சம்பந்தமாக விதிகளை இயற்ற சர்க்காருக்கு அதிகாரமுண்டு. மனு பாரங்கள், தாசில்தார் வைத்துக்கொள்ளும் ரிஜிஸ்தர், மனுக்களுடன் செலுத்தவேண்டிய கட்டணம் முதலியவை சம்பந்தமாக விதிகள் இயற்றப்படும். எல்லா விதிகளும் போர்ட் செயிண்ட் ஜார்ஜ் கெஜட்டில் பிரசுரிக்கப்படும்.

இம்மசோதா 1954 ஜனவரி 13-ந் தேதியிட்ட கெஜட்டில் பிரசுரமாகியுள்ளது.

தேனீர் விருந்தும் பாராட்டுக் கூட்டமும்

பொன்மலை, ஜன. 15—

9—1—54-ல், பொன்மலைப் பட்டி, தி. மு. கழக சார்பில், கழகக் காரியாலயத்தில் தோழர் மு. கருணாநிதிக்கு தேனீர் விருந்து நடைபெற்ற பின், தோழர் எம். ஆறுமுகம் தலைமையில் பாராட்டுக்கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் சி. ராமையன், எ. கோவிந்தசாமி, ஜி. பராங்குசம், அம்பில்-தர்மலிங்கம் ஆகியவர்கள் எதிர்கால ஆக்க வேலைகள் குறித்துப் பேசினர்.

பின்னர், தோழர் மு. கருணாநிதி, பாராட்டுதலுக்கு நன்றி தெரிவித்துவிட்டு, எதிர்கால கழக அறப் போராட்டத்திற்கு அனைவருக்கு அனைவரும் கட்டுப்பாடாக இருக்க வேண்டுமென்றும், கிளைக் கழகங்களை எஃகுக் கோட்டைகளாக்கி, மாவட்டக் கழகங்களை வலிவுள்ளதாக்க உழைவரும் அயராது பாடுபட வேண்டுமென்று கேட்டுக் கொண்டபின் தலைவர் நன்றிகூற விழா முடிவுற்றது என்ச் செயலாளர் சி. எஸ். மணி அறிவிக்கிறார்.

கைத்தறித் துணி விற்பனை

★

சின்னாளப்பட்டி

12—1—54ல், இவ்வூர் தி. மு. கழகத் தோழர்களால் மழை பெய்துகொண்டிருந்தும், முக்கிய வீதிகளின் வழியாக சென்று ரூ 400—8—3க்கு கைத்தறித் துணி விற்பனை செய்யப்பட்டது.

குன்னத்தூர்

இவ்வூர் கழகத் தோழர்களால் கைத்தறித் துணி ரூ 220-0-0க்கு விற்பனை செய்யப்பட்டது

முருகன்பட்டி

11—1—54ல், சின்னாளபட்டி—முருகன்பட்டி தி. மு. கழகத் தோழர்களால் கிராமங்களில் சென்று ரூ 89—12—6-க்கு கைத்தறி துணி விற்பனை செய்யப்பட்டது.

நாமக்கல்

10—1—54 காலை 9½ மணிக்கு தமிழ் சங்கக் கட்டடத்திலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு கைத்தறித் துணி விற்பனை ஆரம்பித்த 1 மணி நேரத்தில் மழை ஆரம்பித்து, மாலை 6 மணி வரை பெய்தும்கூட ரூ 457—6—6க்கு விற்பனை செய்யப்பட்டது. விற்பனையில், தோழர்கள் சோலை முத்து, சி. கந்தசாமி, வி. எம். கந்தசாமி, கே. வி. நல்லுசாமி, கா. செம்பு, பத்மராஜு, கே.எம். கந்தசாமி, டி. சிவஞானம், கே. சி. சங்கரன், எஸ் சின்னையா, மற்றும் பல தோழர்கள் கலந்து கொண்டனர்.

பொள்ளாச்சி

10-1-54 காலை 11 மணிக்கு, தி. மு கழகச் சார்பில், தோழர் அ. சு. பாலு தலைமையில் கைத்தறி துணிகள் விற்பனை நடந்தது. மழையின் காரணமாக குறிப்பிட்ட இடங்களுக்கு செல்ல முடியாவிட்டாலும் ரூ 250 வரை விற்பனையாயிற்று.

டாக்டர் சி. நடேசன் மன்றம்

சென்னை, டிச. 13—

10—1—54-ல், மன்றத்தின் 5-வது ஆண்டு நிறைவு விழா நடந்தேறியது. அதுபோது, தோழர்கள்: என். ஸ்ரீ ரங்கராமானுஜம் தலைவராகவும், பி ஆர் கோகுலகிருட்டிணன் துணைத்தலைவராகவும், எ. வெங்கடேசன் செயலாளராகவும், வி மாதவன் துணைச்செயலாளராகவும், ஜி தாமோதரம் பொருளாளராகவும், மற்றும் 16 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

பொங்கல் விழா சிறப்பு பற்றி கார்மேகனார்!

தமிழின் தொன்மையைப் பாராட்டுகிறார்

மதுரை, ஜன. 19—

"இன்றைய விழாவாகிய தமிழர் திருநாள் இயற்கையோடிணைந்த விழா; தீபாவளியைக் காட்டிலும் உண்மையான எழுச்சியுடன் கொண்டாடப்படும் விழா, இவ்விழா ஒன்றே! இது உண்டியைப் பற்றிய விழா—மக்கள் சமுதாயத்தில் முதல் முதல் உண்ட நாள்! முதல் முதலில் உணவைத் தந்த மனிதனின் பாராட்டு நாள்."

—என்று, 14—1—54ல், நடைபெற்ற மதுரை திருவள்ளுவர் கழகத் திருநாளின் முதல் நாள் நிகழ்ச்சியான இயல் விழாவில் தலைமை வகித்துப் பேசுகையில், மதுரைத் தமிழ்ப் பேராசிரியர் திரு ஆ கார்மேகக் கோனார் அவர்கள் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:

"மேழிச் செல்வமே நாட்டின் உயிர் நாடி அரசியல் முறையிலே, தமிழ்மொழி வாயிலாகச் சிறப்புற்றுப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே விளங்கியிருந்த பெருமை, தமிழ் நாட்டிற்கு உண்டு.

ஒரு காலத்தில், வடமொழியில், புராண இதிகாசங்களை மொழி பெயர்த்து, அவையே தமிழின் பெருமை என்று எண்ணிக் கொண்டிருந்தனர், தமிழர்கள்! அப்படி எண்ணியவர்கள், சங்க இலக்கியங்களை நன்கு அறியாதவரே!

தமிழ் மொழி, வளம் பெற்ற மொழி; அதனை நாம் வளர்க்க வேண்டியதில்லை; தமிழ் மொழியினால் நாம் ஆக்கம் பெறவேண்டும்."

தமிழகமெங்கணும் — திராவிடர் திருவிழா

★

சென்னை—சூளை

தி. மு. கழகத்தில் அமைந்துள்ள முத்தையா நினைவு இரவு பள்ளியில், காலை 9 மணி அளவில், தோழர் மா. கண்ணப்பர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. எழுத்து, பேச்சு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி கண்ட சிறுவர்களுக்கு பரிசுகள் வழங்கப் பெற்றன. இறுதியில் அனைவருக்கும் பொங்கல், தேனீர் வழங்கப்பட்டது.

சென்னை (8வது வட்டம்)

சென்னை பெத்துநாய்க்கன் பேட்டை திருவள்ளுவர் முன்னணிக் கழகத்தின் சார்பில் 350 ஏழைகளுக்கு தயிர் சாதம் வழங்கப்பட்டது. காலை 7 மணிக்கு கழக மாடியில், தோழர் சி. ஆர். பாலசுந்தரம் அவர்களால் கொடி உயர்த்தப்பட்டது. மற்றும் 6 இடங்களிலும், தோழர் என். வி. நடராசன் வீட்டு மாடியிலும் சி. ஆர். பாலசுந்தரம் அவர்களால் தி. மு. கழகக் கொடிகள் உயர்த்தப்பட்டன.

சென்னை (31வதுவட்டம்)

இவ்வட்டத்தின் சார்பில், தோழர் டி. வி. நாராயணசாமி தலைமையில் "திராவிட நாடு" படம் ஊர்வலம் முக்கிய வீதிகள் வழியே எடுத்துச் செல்லப்பட்டது. ஊர்வலத்தில் அறிவகம் குடி நிதிக்காக ரூ. 26—6—6 வசூலாயிற்று. பொது மக்களால் தோழர் டி. நாராயணசாமிக்கு அணிவிக்கப்பட்ட நான்கு மாலைகளும் ஏலம் விடப்பட்டதில் ரூ. 6—5—0க்கு விற்பனையாயிற்று. அந்தத் தொகையும் அறிவகம் குடி நிதிக்காக சேர்த்துக்கொள்ளப்பட்டது. பொங்கல் விழாவை விளக்கி நாராயணசாமி அவர்கள் பேசியதும் செயலாளர் நன்றி கூற, விழா இனிது முடிந்தது. பிற்பகல் ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது என்று செயலாளர் அறிவிக்கிறார்.

சென்னை-43வது வட்டம்

சென்னை மீர்சாகிப்பேட்டை 43 வட்ட தி. மு கழக சார்பில், காலை 9 மணிக்கு 'திராவிடர் திருநாள்' கொண்டாடப்பட்டது அதுசமயம், தோழர் அரங்கசாமி கொடியேற்றிவைத்தார் தோழர் தெ. அரங்கராசன் தலைமையில், தோழர்கள் வெ கி. பார்த்தசாரதி, கோ இளவரசு, இளம்பரிதி, இரா. கண்ணன் ஆகியோர் பேசினர். பிற்பகல் 1 மணிக்கு சிறுவர்களுக்கு இனிப்பும், ஏழைகளுக்கு உணவும் அளிக்கப்பட்டது.

மாதவரம்

தி. மு கழக சார்பில், காலை 9 மணிக்கு, கழகக் கட்டடத்தில் தோழர் ம. செங்குட்டுவன் தலைமையில் தோழர்கள் எ செயராசு, மா. பெ. வேதாச்சலம், கா. கோ. அரசு, மா. கோ. கரிகாலன், எம். இ பாண்டியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் இரா. இளங்கோ கொடியேற்றிவைத்தார். தோழர் என். என். வாசன் இயக்கப் பாடல்கள் பாடினார். காலை 11 மணிக்கு சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

திருப்பூர்

தொழிலாளர் பகுத்தறிவுப் படிப்பக சார்பில், 15—1—54 காலை 9-30 மணிக்கு கொண்டாடப்பட்டது. விழாவிற்கு தோழர் கா. கா. சங்கரன் தலைமை வகித்தார். தோழர்கள் பி. ராமசாமி, பி. ஜெ ராஜன். துரைசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர் இறுதியில் தின்பண்டம் வழங்கப்பட்டது.

திலக்கோட்டை

இவ்வூர் தி. மு. இளைஞர் கழகத்தின் சார்பில் 14—1—54 இரவு 8மணிக்கு 'முன்னேற்றக் கழகமும் பொங்கல் விழாவும்' என்பது பற்றி பல தோழர்கள் பேசினர். பொது மக்களுக்கு பொங்கல், கரும்பு முதலியன வழங்கப்பட்டது.

தேனூர்

தி. மு. கழகப்பொதுக் கூட்டம் தோழர் டி. சுப்பாணி தலைமையில் நடைபெற்றது. பஞ்சாயத்து போர்டு தலைவர் டி. இராமலிங்கம் கொடியேற்றுவித்தார். 'திராவிடர் திருநாள்' என்பது பற்றி தோழர்கள் பி. கருப்பையா பேசினர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

கடலூர்

தென்பகுதி ரயில்வேமென் யூனியன், கடலூர் கிளையின் சார்பில், 16—1—54-ல் பொங்கல் விழாவையொட்டி நடைபெற்ற பூபந்து விளையாட்டுப் போட்டியில், தோழர்கள் என். ராகவானந்தம், பஞ்சாட்சரம் கலந்துகொண்டு வெற்றிபெற்று வெள்ளிப் பேழையைப் பெற்றனர்கள்.

குனியமுத்தூர்

15—1—54-ல், மாணவர் மன்றத்தினரால் விழா கொண்டாடப்பட்டது. தோழர் மருதவாணன் கொடியேற்றி வைத்தார். தோழர் ஜே. எஸ். கண்ணப்பர் தலைமையில், தோழர் சுந்தரராசன் மறைந்த மாவீரர் சுந்தரம் படத்தைத் திறந்து வைத்தார் சொற்போட்டி நடைபெற்றது. மாலை தோழர் ஜி. கே. தேவராஜு தலைமையில், தோழர்கள் கிருஷ்ணசாமி, மே. சிதம்பரனார், சுந்தரராசன், தோழியர் காந்தகாவேரி ஆகியோர் பேசினர். தோழர் ஆ. திருவேங்கடம் நன்றி கூறினார். அன்றிரவு 'சேர் திருத்தவாதி?' என்ற நாடகம் நடைபெற்றது.

சின்னாளப்பட்டி

15—1—54ல், தோழர் எ. எம் டி. நாச்சியப்பன் தலைமையில், வள்ளுவர் திடலில் பொங்கல் விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம், தோழர்கள் பி சமதர்மம், எம் கி. சமுத்திரக்கண்ணன், டி. சிதம்பரம், எஸ். சேதுபதி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

மருதூர் வடக்கு

இவ்வூர் தி மு. கழக கமிட்டிக் கூட்டம், தோழர் அர. அணிவழகன் தலைமையில் நடைபெற்றது. தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டது. மாலை 6 மணிக்கு, பொங்கல் விழாக் கூட்டம் தோழர் அர. அணிவழகன் தலைமையில் நடைபெற்றது தோழர்கள் முருகு. த சீனிவாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கரூர்

தி. மு கழகச் சார்பில், மாலை 6 மணிக்கு நாகம்மையார் திடலில், தோழர் கே. எ. முருகேசன் தலைமையில், ஈரோடு எஸ் அப்பாவு பேசியபின், தோழர் இ. வி. கே. சம்பத் அவர்கள் தற்கால அரசியல் குறித்தும், திராவிடர் திருநாள் பற்றியும் சொற்பொழிவாற்றினார்.

தென்திருப்பேரை

தி. மு கழகச் சார்பில், மாலை 2-30 மணிக்கு, ஊர்வலமும், இரவு 8 மணிக்கு வ. உ. சி. திடலில், மா. தமிழ்வாணன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் நெல்லை பி. சங்கரலிங்கம், மு. சு. மணிமொழியன், டி. கே. எஸ். பன்னீர் செல்வம் முதலியோர் சொற்பொழிவாற்றினர்.

"சக்திக்கு மேற்பட்டதைப் பெற்றிருக்கிறோம்!"

"பிரிட்டிஷார் இருந்தாலே நன்றாக இருந்திருக்கும்"

எதிர்ப்பை அழிக்க 'வாமனாவதாரம்' தேவையா?!

சி. ஆர். அதிகார போதையின் தடுமாற்றம்!

சென்னை, ஜன. 18—

சென்னை, திருவல்லிக்கேணி தமிழ் இளைஞர் முன்னணியின் ஆதரவில் நடைபெற்ற பொங்கல் திருநாள் பொதுக்கூட்டத்தில் பேசும்போது, சென்னை முதலமைச்சர் சி. இராசகோபாலாச்சாரி குறிப்பிட்டதாவது:—

அடிமைப் புத்தி!

"இந்த விழாவை (பொங்கல் விழாவை) ராஜாஜி விழா என்று பெயர் வைத்துக் கொண்டாடலாம் என்று சொன்னார்கள். இது மகா அபசாரம். இந்த மாதிரி எண்ணம் தோன்றுவதே மகா அபசாரம்."

பின்புத்தி!

"அதிகமென்று பைத்தியக்காரத்தனமாக சுதந்திர அதிகாரத்திற்குப் பாடுபட்டோம். பிரிட்டிஷ்காரர்கள் இங்கு இருந்திருந்தாலே நன்றாக இருந்திருக்கும் போலிருக்கிறது. இந்த விஷயம் கிளப்பி இருக்காது. சக்திக்கு மேற்பட்டதைப் பெற்றிருக்கிறோம்.

பதவி மோகம்!

"பொங்கல் விழாவில் புதிதாக நான் சொல்லக்கூடியது அதிகமாக ஒன்றுமில்லை. பொங்கல் விழாவில் மஞ்சள் கரும்பை வைத்துப் பார்ப்பது போல் என்னையும் வைத்துப் பார்க்கிறீர்கள், இங்கு. இந்த புனித ஸ்தலத்தில் கோயில் முன்பு உங்களைப் பார்க்க எனக்கும் சந்தோஷம். நாம் எல்லோரும் இப்படியே சந்தோஷமாக இருக்க வேண்டும்."

பூசாரி விஷமம்!

"பொங்கல் ஆயுதபூஜை இரண்டும் முக்கியமானவைகளாகக் கருதப்பட வேண்டும். மந்திரத்திற்கு தேவையில்லை. எல்லா மக்களும் கொண்டாடும் பண்டிகைகள், பல பூர்வர்கள் கண்டு யோசித்து வைத்திருக்கிறார்கள். ஆயுதத் திருப் பூஜை பனிதா உபயோகிப்பவை அல்ல. ஆண்டவன் ஆயுத ரூபமாக இருக்கிறான் என்று நினைத்து பூஜை செய்வது இது"

உயர் ஜாதிக்காரர் உபதேசம்!

"தொழிலில் தாழ்ந்தது இது, உயர்ந்தது இது என்று நினைப்பது அறியாமை. இது போக வேண்டும்."

"இம்மாதிரி தொழிலில் உயர்வு தாழ்வு நினைப்பாவம் கூடாது; இது போக வேண்டும். மகாவிஷ்ணு வாமனாவதாரம் எடுத்து போக்கினால் தான் முடியும் போலிருக்கிறது. செய்வது எந்தத் தொழிலாயினும் அவசியமானதே! படிப்பு எவ்வாறு அம் தொழில் எதையும் செய்வது முக்கியமானதென்று [illegible] வேண்டும்.

பஞ்சம [illegible]!

[illegible] ஜாதி [illegible] ... பின்னர், இதை செய்... இது என் ஜாதி ... என்பது அறி... இதைவிட வேறு

அறியாமை கிடையாது. இமயமலை, பொதியமலை இரண்டும் சேர்ந்தாற்போல பெரிய அறியாமை. இந்த அறியாமையைப் போக்கத்தான் தொழில் முறை படிப்பு என்ற புதுத் திட்டம். இது வாமன ரூபத்தில் இருக்கிறது. இது பெரிதாக திருவிக்கிரம ரூபத்தில் வளர்ந்து, அறியாமையை ஒழிக்க வேண்டுமென்பது ஆசை."

மொல்லம்பட்டியில் தி.மு. கழகத் துவக்கம்

பழனி, ஜன. 16—

பழனி வட்டாரத்தைச் சார்ந்த மொல்லம்பட்டியில் 9—1—54 மாலை 4 மணிக்கு தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் பா. [illegible] தலைமையில் நடைபெற்றது. கழக நிர்வாகிகள் தேர்தலை தோழர் அ. தமிழரசு முன்னின்று நடத்தி வைத்தார். தோழர் கே. பி. தங்கமணி அமைப்பு முறை பற்றிப் பேசிய பின், கீழ்க்கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: தே. வேலு; அணைச் செயலாளர்: ச. மகாலிங்கம்; பொருளாளர்: அப்பாதுரை; செயற்குழு உறுப்பினர்கள்: தே. வ. புரட்சிமணி, சின்னப்பன் பின்னர், [illegible] சாவடியில் தி. மு. கழகத் துவக்க விழா பொதுக் கூட்டம் தோழர் தே. வேலு தலைமையில் நடைபெற்றது. தோழர் அ. தமிழரசு, சாவடிக்கு முன்புறமுள்ள [illegible] கழகக் கொடியை ஏற்றிவைத்து சொற்பொழிவாற்றினார். தோழர்கள் கே. பி. தங்கமணி, சூ. பரமசிவம், ஆ. செல்லையா ஆகியோரும் சொற்பொழிவாற்றினர். பின்னர், இளமதி நாடகக் குழுவினர் பக்க வாத்தியங்களுடன் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.

அந்தியூரக் கன்னாட்டு விழா செல்லை மாவட்டம் [illegible] கோயில் தி. மு. கழகக் கட்டிடத் திறப்பாக தோழர் வி. டலைக் காரன் தலைமையில் அந்தியூரக் கன் நாட்டப்பட்டது. வன தோழர் பெ. சுயம்பு அறிவிக்கிறார்.

அண்ணா முரசொலி மன்றம் திறப்பு விழா

உதவை, ஜன. 19—

14—1—54-ல், மேற்படி மன்றத் திறப்பு விழா பழைய ஒத்தக் கொட்டிபேக்கரி மேல்மாடியில் தோழர் தி. செயராமன் தலைமையில் நடைபெற்றது. தோழர் ஈ. தாசன் திறப்புரை நிகழ்த்தினார். தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். கூட்ட முடிவுக்குப் பின் தேநீர் விருந்து நடைபெற்றது; சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. பின்னர் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: தி. செயராமன்; துணைச் செயலாளர்: பொ. மாணிக்கம்; பொருளாளர்: சுந்தர்ராஜ்; செயற்குழு அங்கத்தினர்களாகத் தோழர்கள் நா. கஞ்சன்டன், பொன்னுராசு, ஆறுமுகம், மு. அழகிரி, குமரன், ஈ. தாசன், சுப்ரமணி, சின்னசாமி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

'தமிழரசி'

தண்டலைமட்டப்பிரம் தி. மு. கழகப் பொருளாளர் தோழர் கே. எம். பாபுவின் துணைவியார் தோழியர் ரத்தினபாய் அவர்களுக்கு, 14—12—53-ல், பெண் மகவு பிறந்தது; குழந்தைக்கு 'தமிழரசி' என்று பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அளிக்கப்பட்டது—வரப் பெறோம்—நன்றியுடையதாகப் பெறுப்பாளர்.

ஐதராபாத்திற்கு புதிய காங்கிரஸ் தலைவர்!

கருத்துவேற்றுமையைக் காட்டி ராமாநந்த தீர்த்தர் விலகினார்!

ஐதராபாத், ஜன. 17

ஐதராபாத் காங்கிரஸ் அமைச்சர் குழுவிற்கும், காங்கிரஸ் குழுவிற்கும் சிலகாலமாகவே பிணக்கு இருந்து வந்தது. சட்டசபை காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்குள்ளாகவும் குறிப்பிடத் தகுந்த அளவு கருத்து வேற்றுமை இருந்து வந்தது. இந்த கருத்து வேற்றுமை சென்ற வாரத்துக்கு முன் சட்டசபை கட்சித் தலைவராக முதல் மந்திரி ராமகிருஷ்ணராவே தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து, அறவே நீங்கவில்லையாயினும், தற்கால சாந்தியாக மறைந்து விட்டது.

இதுபோலவே, காங்கிரஸ் குழுவிற்கும், அமைச்சர் குழுவிற்கும் இருந்துவந்த பிளவையும் போக்க வேண்டி, காங்கிரஸ் தலைவர் ராமாநந்தர் விலகிக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது. அமைச்சர் குழுவிற்கும் தமக்கும் உள்ள வேற்றுமை அகற்றப்படக் கொள்கையைப் பற்றியது என்றும், எந்த ஒரு கொள்கையை சர்க்கார் மேற்கொள்வதாக இருந்தாலும், அது பற்றி, முதல் அமைச்சர் பிரதேச காங்கிரஸ் தலைவரைக் கலந்து கொண்டு செயல்படுவதுதான் நல்லதென்றும், இதுபோன்ற உயர்நிலை தனக்கும் முதல் மந்திரிக்கும் இதுவரை ஏற்படவில்லை என்றும், பல விவகாரங்களில் நாமிருவரும் பிணங்கி இருப்பதாகவும், எனவே, இனியும் நான் காங்கிரஸ் தலைவராக இருப்பதில் பலன் எதுவும் விளையப்போவது இல்லையாது என்றும், சுட்டிக்காட்டி, தனது தலைமைப் பதவியிலிருந்து விலகிக்கொண்டுள்ளார் ராமாநந்தர்.

ராமகிருஷ்ணராவ் அமைச்சர் குழுவில் கிலானி அமைச்சராக இருக்கிற கே. வி. ரங்கா ரெட்டி காங்கிரஸ் தலைவராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றார். தேர்தலை அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஸ்ரீனிவாச மல்லையா தலைமைவகித்து நடத்தினார்.

தென்னாப்பிரிக்க இந்தியர்களின் துயரம்

டர்பன் வழக்கறிஞர் தரும் விளக்கம்

திருச்சி, ஜன. 19—

தென் ஆப்பிரிக்காவில் மலான் சர்க்கார் பின்பற்றும் இன ஒதுக்கல் கொள்கையினால், இந்தியர்களுக்கும், மற்ற ஜாதியினர்களுக்கும் ஏற்படும் கஷ்டங்கள் பற்றி திருச்சி ரோட்டரி கிளப்பில் டர்பன் இந்திய பாரிஸ்டர் ஜே. [illegible], காட்ப்ரே பேசுகையில் கூறினார்.

ஐரோப்பியர்களுக்குச் சமமான பிரஜா உரிமை பெற, தென் ஆப்பிரிக்க இந்தியர்கள் நடத்தும் போராட்டம் பற்றி அவர் விவரித்து, இந்திய மக்கள் மனப்பூர்வமாக ஊக்கமளிக்க வேண்டு மென்று கேட்டுக்கொண்டார்.

இப்பிரச்னை, உள்நாட்டுப் பிரச்னை என்றும், மற்ற நாடுகள் தலையிடுவது அவசியமல்ல என்றும் மலான் சர்க்கார் கூறுவதாகவும், இந்தியர்களுக்கு உரிமை [illegible] இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசினார்:— 1861-ல், தென் ஆப்பிரிக்க [illegible] விடும் [illegible] யில் இருந்தபோது, இந்திய [illegible] உடன்பாடு செய்து கொண்டு, பீகாரிலிருந்தும், சென்னையிலிருந்தும் விவசாயிகள், நூற்றுக்கணக்கில் தென் ஆப்பிரிக்காவுக்குக் குடிபுகுந்து, வியாபாரம் புத்துயிர் பெற உதவினர், ஆகவே, தென் ஆப்பிரிக்காவில் முதலில் குடிபுகுந்தவர்கள் இந்திய விவசாயிகளே ஆவர். அவர்கள் தென் ஆப்பிரிக்க ஐரோப்பியர்களுக்கும் உதவினர்.

ஆதிகுடிகளின் சந்ததியினர்களுக்கு தென் ஆப்பிரிக்க சர்க்கார் கல்வி வசதிகள் மறுக்கின்றனர்; உயர்தர கல்வி பெறுவதில் இந்தியர்களுக்கும் பல இடையூறுகள் ஏற்பட்டிருக்கின்றன; [illegible], [illegible] பிளாட்பாரம், டிரெயின்கள் சிற்றுண்டிச் சாலைகள் ஆகியவற்றில், இந்தியர்களை, ஐரோப்பியர்கள் பிரித்து வைத்திருக்கின்றனர்; கல்வி, வர்த்தகம், தொழில் ஆகிய அனைத்திலும் இந்தியர்கள் பிரிந்து வைக்கப்பட்டுள்ளனர்; எனினும், இந்தியர்கள் அங்கு வசித்து வருகின்றனர்; இங்கு வசிக்கும் 35 கோடி இந்தியர்கள், அவர்கள் உரிமைக்காக விச்சயம் போராடுவர்; இந்தியர்களின் ஆதரவு, அவர்களுக்கு அவசியம் தேவையாக இருக்கிறது; தென் ஆப்பிரிக்க இந்தியர் பிரச்னை, உள்நாட்டுப் பிரச்னையல்ல என்று இந்தியர்கள் கூறவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்."

☆

சிப்பந்திகளுக்கு தெ. ஆ. நகர சபை தாக்கீது!

தென் ஆப்பிரிக்க ஸ்தல ஸ்தாபனங்கள் குறித்து விசாரிக்கும் கமிஷன் முன்பு டிரான்ஸ்வால் இந்திய காங்கிரஸ் பிரதிநிதிகள் அளித்த சாட்சியத்தில், 'இந்திய வர்த்தகர்களிடமிருந்து எதுவும் வாங்காதிருப்பதன் மூலம், ஆதரவு தராமலிருந்தால், அதற்குப் பாராட்டுக் கிடைக்கும்', என விட்வாட்டர்ஸ்ராண்ட் நகர கௌன்சில் சிப்பந்திகளுக்குச் சுற்றறிக்கையாக அனுப்பிய கடிதத்தைச் சமர்ப்பித்தனர்.

இராயபுரம் [illegible] முன்னேற்றக் கழகத் [illegible] தோழர் இராசகோபால் செட்டியார், [illegible], அவர்கள், அழகிரி அச்சகத்தில் [illegible] பெற்று (24, ஆதியப்பா நாயக்கன் தெரு, [illegible]) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.

'நம் நாடு' ஏஜண்டுத் தோழர்கட்கு

'நம் நாடு' பில் பாக்கித் தொகையை அனுப்பி வைக்காத தோழர்கட்கு, 'நம் நாடு' 20—1—54-ல் அனுப்புவது நிறுத்தப்படும். டிபாசிட் தொகைக்குமேல் பில் பாக்கியும், பழைய பாக்கியுமுள்ள தோழர்கட்கும், 'நம் நாடு' அனுப்புவதையும் நிறுத்தி, ஏஜன்சியையும் ரத்து செய்யப்படுமென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இனி, வருத்தப்பட்டுக்கொண்டு, கடிதங்கள் எழுதுவதினால் மட்டும் பயனில்லை. ஒரு மாத பில் பாக்கியை, ஒரு மாத தவணையில் தான் அனுப்ப முடியும் என்று கருதும் தோழர்கள், முன்பணம் (டிபாசிட்) தொகை இரண்டு மடங்கு அதிகம் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொண்டோம்; கொடுக்கப்படவில்லை. 'நம் நாடு' அனுப்புவதை நிறுத்தி, ஏஜன்சியை ரத்து செய்யப்படுவதைத் தவிர, வேறு வழி இல்லை. ஏஜண்டு இல்லாத ஊர்கட்கும் புது ஏஜண்டு நியமிக்கப்படும்.

'அறிவகம்', இராயபுரம்.
சென்னை. 18-1-54

பொறுப்பாளர்,
'நம் நாடு.'

சத்தியவிஜயநகரம் தி. மு. கழகம்

7—1—54-ல், நடைபெற்ற கழகச் செயற்குழு கூட்டத்தில், கழக உறுப்பினர் தோழர் திருநாவுக்கரசு அவர்களின் தந்தையின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டது.

14-1-54-ல், அரண்மனை வீதியில் உள்ள தோழர் ஜெகதீசன் இல்லத்திற்குக் கழகம் மாற்றப்பட்ட போது, அங்கு, தோழர் ஏ. பழனிச்செல்வம் கழகத்தைத் திறந்து வைத்தார்; தோழர்கள் சம்பத் பெரியார் படத்தையும் டி. ஆர். ஜெகதீசன் அண்ணாதுரை படத்தையும் திறந்து வைத்தனர். பின்னர், தோழர் திருநாவுக்கரசு தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் வெங்கடாசலம், [illegible], நாராயணசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

10, 11, 12, 13-1-54-ம் தேதிகளில், கழகத் தோழர்களால் ரூ 50க்குக் கைத்தறி துணிகள் விற்பனை செய்யப்பட்டது.

தோழர் ஜி. டி. நாயுடு அவர்களின் தொழிற் கல்வி கண்காட்சி

மாணவர்களுக்குப் பிரத்தியேக அனுமதி

சென்னை, ஜன. 19—

கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள் இன்னும் மற்ற கல்வி நிலையங்களிலுள்ள மாணவர்களும், ஜனவரி 31-ம் தேதி வரை பார்க்கபேர் கண்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள, கோவை ஜி. டி. நாயுடு அவர்களின் பொருட்காட்சிசாலைக்கு பிரதி தினம் காலை 9 மணி முதல் 12 மணி வரையில், கட்டணமின்றி அனுமதிக்கப் படுவார்கள். இந்தப் பொன்னான சந்தர்ப்பத்தை சென்னை மாணவர்கள் இழந்துவிடக் கூடாது. முன்கூட்டியே பள்ளித் தலைமை ஆசிரியர்களும், கல்லூரித் தலைவர்களும் ஜி. டி. நாயுடு அவர்களுக்கு, எத்தனை மாணவர்களை அனுப்ப எண்ணியுள்ளார்களென்பது குறித்துக் கடிதமெழுதக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவசியமேற்பட்டால், மேற்படி கண்காட்சி பிப்ரவரி 4-ம் தேதி வரையில் நீடிக்கப் படும்.